28.03.2024

OS.No.288/2022

PW1-திருமலைப்பாண்டி

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 28.03.2024.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி : (பிரதிவாதி தரப்பில்)

4. பிராதுதபசில் சொத்தில் இதற்குமுன்பு உங்களது குடும்பத்திலிருந்து யாராவது வீடு கட்டினார்களா என்றால் இல்லை. பிராதுதபசில் சொத்து நத்தம் இடம்தானே என்றால் எனக்கு தெரியாது. ஆனால் வழக்குரையில் பிராதுதபசில் சொத்து நத்தம்இடம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். உங்களது தந்தைக்கு அரசால் வழங்கப்பட்ட பட்டடாவை தவிர வேறு எதும்முன் ஆவணம் இல்லை என்றால் சரிதான்.

5. பட்டா, அனுபவத்தை பொறுத்து அரசால் வழங்கப்படும் என்றால் சரிதான். உங்களது தந்தை, சமுத்திரம் தெருவில் வசித்துவருகிறார் என்றால் சரிதான். இந்ததெருவில் உங்களது தந்தைக்கு பாத்தியப்பட்ட ஒரே ஒருவீடு மட்டும்தான் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1ல் எனது தந்தை கதவு எண்.5/191ல் வசிப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. வீட்டை பார்த்தபிறகுதான் பொதுவாக குடும்ப அட்டை வழங்கப்படும் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் குடும்ப அட்டை செல்லப்பா பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. பிராதுதபசில் சொத்திற்கு பிரதிவாதி பெயரில் குடும்பஅட்டை வழங்கப்பட்டுள்ளது என்றாலும், பிராதுதபசில் சொத்தின் அனுபவம் பல வருடங்களாக பிரதிவாதியிடம்தான் உள்ளது என்றாலும் சரியல்ல.

7. பிராதுதபசில் சொத்தில் பிரதிவாதி தந்தை வீடுகட்டியுள்ளார் என்றாலும், அதற்கு கதவு எண்.5/190 வழங்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் பிராது தபசில் சொத்தின் வரைபடம் என்றால் எனக்கு தெரியாது. பிராதுதபசில் சொத்தின் கிழக்கே யார் இடம் உள்ளது என்றால் ஹரிஹரசுதன் வீடு உள்ளது. நீங்கள் வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதுவதற்கு முன்பே மேற்படி ஹரிஹரசுதன் வீடு உள்ளது என்றால் சரிதான்.

8. வாசா.ஆ.1 எழுதிய முழுவிவரமும் உங்களுக்கு தெரியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 எழுதும்போது நீங்கள் உடன் இருந்தீர்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் கிழக்கே பால்நாடார் மனை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் பிராதுதபசில் சொத்து பற்றி உங்களுக்கு சரியாக தெரியாது என்றாலும், அதனால்தான் தவறுதலாக எல்லை குறிப்பிட்டுள்ளீர்கள் என்றாலும் சரியல்ல.

9. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 1 வில்லங்கசான்று பிராதுதபசில் சொத்திற்கு கிழக்கே செல்லப்பா மனை வீடு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நீங்கள் என்ன படித்திருக்கிறீர்கள் என்றால் 10 ம் வகுப்புவரை படித்திருக்கிறேன். வா.சா.ஆ.1 ஆவணத்திற்கு பிறகு சார்பதிவாளர் களஆய்வு செய்வதற்கு வந்தாரா என்றால் இல்லை.

10. இடத்தின் போட்டோ எடுத்து வா.சா.ஆ.1 உடன் இணைக்கப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் எழுதும்போது பிராதுதபசில் சொத்தில் என்ன இருந்தது என்றால் காலிஇடமாக இருந்தது. அதன்பிறகு பிரதிவாதி வீடு கட்டிவிட்டார். காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனுவிற்கு காவல்நிலையத்தில் என்ன சொன்னார்கள் என்றால் கோர்ட்டிற்கு போக சொன்னார்கள்.

11. பிராதுதபசில் சொத்தின் எல்லை தெரியாது என்றாலும், அனுபவம் உங்களுக்கு எப்போதும் இருந்தது இல்லை என்றாலும் , பிராதில் கோரியுள்ள பரிகாரங்கள் உங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும், வழக்கானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

**12. மறுவிசாரணை இல்லை.**

ஒம்/-கே.பாஸ்கர்

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி

தென்காசி